DINAMALAR
National Tamil Daily

# பசுமைத்திறன் மேம்பாட்டு பயிற்சி வன மரபியல் நிறுவனத்தில் துவக்கம்

கோவை, நவ.11–

இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு கோவை நிறுவனத்தில், தாவர திசு வளர்ப்பு மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்த பசுமைத்திறன் மேம்பாட்டு பயிற்சி தொடங்கியுள்ளது.

இங்குள்ள சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் நடந்த நிகழ்ச்சியை, நிறுவன இயக்குனர் குன்னிகண்ணன் தொடங்கி வைத்தார்.

அவர் பேசுகையில், ''இந்த பயிற்சி, 30 சதவீதம் வகுப்பறையிலும், 70 சதவீதம் களத்திலும் அளிக்கப்படும். தரமான நடவுப் பொருட்களை உற்பத்தி செய்வதில் திசு வளர்ப்பின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறி விட்டது. இந்த வாய்ப்பை பயிற்சியாளர்கள் திறம்பட பயன்படுத்தி தொழில் முனைவோராக மாற வேண்டும்,'' என்றார்.

'என்விஸ்' ஒருங்கிணைப்பாளரான முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், ''இந்த பயிற்சி, சுய வேலைவாய்ப்பை அளிக்கக்கூடியது. பசுமை திறன் கொண்ட தொழிலாளர்களை உருவாக்க இந்த பயிற்சித்திட்டம் மூலம் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது,'' என்றார்.

பயிற்சி பொறுப்பாளர் ரேகா வாரியர், திசு வளர்ப்பின் நோக்கம் பற்றி விளக்கினார். மூத்த திட்ட அலுவலர் விக்னேஸ்வரன் நன்றி கூறினார்.

பல்வேறு மாநிலங்களை சேர்ந்தோர் பங்கேற்றுள்ள இந்த இலவச பயிற்சி டிச.,31 வரை அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுவோருக்கு மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை அமைச்சக சான்றும் வழங்கப்படுகிறது.

62. News in Dinamalar, 11.11.2021, Coimbatore, Inauguration of Green Skill Development Programmes by IFGTB ENVIS.